காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 26 புதன்கிழமை 10.07.2024 கதிர் 245

# பிணை முறியாளர்களுடனான பேச்சு அடுத்த வாரம் நிறைவு

## அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

இலங்கையின் கடன்மறு சீரமைப்பு தொடர்பாக சர்வதேச பிணைமுறிபத்திர உரிமையாளர்களுடன் முன்னெடுத்துள்ள பேச்சு அடுத்த சில வாரங்களில் இலங்கை பூர்த்தி செய்யுமென இலங்கையின் அயலுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

அயல்நாடுகளான இந்தியா சீனாவை கையாளும் விதத்தில் எந்த வேறுபாடுகளும் இல்லை என்பதை உறுதிசெய்வதற்காக இலங்கை தனது உறவுகளை சமநிலைப்படுத்த முயல்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில்இடம்பெறும்றொய்ட்டர்ஸ் நெக்ஸ்ட் மாநாட்டில் இலங்கைக்கு கடன்வழங்கியவர்களுடனானமறுசீரமைப்பு ☞2

# இனி இது ரகசியம் அல்ல!

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவிக்கு, அதாவது மறைந்த தலைவர் சம்பந்தனின் இடத்திற்கு யாரைத் தெரிவு செய்வது என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்கான கூட்டம் இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக்கூட்டத்திற்கு தமிழ்அரசுக்கட்சியின்நாடாளுமன்ற கொறடாவான சார்ள்ஸ்நிர்மலநாதன் அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று பிற்பகல் 2 மணிக்கு இந்தக் கூட்டம் இடம்பெறும் என அவர் அறிவித்தல் வழங்கியுள்ளார். இந்தக் கூட்டத்தில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனை கூட்டமைப்பின் தலைவராகத் தெரிவு செய்யவேண்டும் என்று அந்தக் கட்சியின் செயலாளர் கோவிந்தம் கருணாகரன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதேபோன்று புளொட் தலைவர் சித்தார்த்தனும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் எழுதி செல்வத்திற்கு ஆதரவு கேட்டுள்ளார். ☞2

# ரஹீம் எம்.பி மீது பிடியாணை

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு புத்தளம் மேலதிக மாவட்ட நீதிபதியும் நீதிவானுமான அயோனா விமலரத்ன பிடியாணை பிறப்பித்துள்ளார்.

கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருஞ்சாம்பிட்டிய பகுதியில் உள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றுக்கு சொந்தமான கட்டிடமொன்றிற்குள் அத்துமீறி நுழைந்து சொத்துக்களை சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் அலி சப்ரி ரஹீம் இந்த வழக்கு தொடர்பான விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்துள்ளதுடன் அவர் சார்பில் சட்டத்தரணியும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கொக்குத்தொடுவாய்க்கு ஐ.நா. அதிகாரி வருகை

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாங்கட்ட அகழ்வாய்வின், ஐந்தாம் நாள் அகழ்வாய்வுப் பணிகள் இடம்பெற்றது.

இந்நிலையில்குறித்த கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் அகழ்வாய்வுகள் இடம்பெறும் இடத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகத்தின், மனித உரிமைக்கானஅலுவலர் லூடியானா ஷெல்ரின் அகிலன் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்ததுடன், குறித்த அகழ்வாய்வு நிலைமைகள் தொடர்பில் பேராசியர் ராஜ்சோமதேவ, சட்டத்தரணி கே.எஸ். நிரஞ்சன் ஆகியோரிடம் கேட்டறிந்துகொண்டார்.

இந்நிலையில் ☞2

# சாவகச்சேரி வைத்தியசாலை குறித்து விசாரணை தேவை

## அமைச்சவையில் டக்ளஸ் வலியுறுத்து

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வினைத்திறனுடன் இயங்குவதை விரும்பாத சக்திகளே கடந்த சில தினங்களாக அங்கு நிலவிய அசாதாரண சூழலுக்கும், மக்கள் போராட்டத்திற்கும் காரணம் என்று அமைச்சரவையில் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விசாரணைக்குழுஅமைக்கப்பட்டு, சீர்கேடுகளுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கடற்றொழில்அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட குறித்த விடயத்தினைஅமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

குறித்த கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாவது,

சாவகச்சேரி ஆதார ☞2

# அஸ்வெசுமவுக்கான 2ஆம் கட்ட தகவல் சேகரிப்பு அடுத்த வாரம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கமைய நடைமுறைப்படுத்தப்படும் 'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் வழங்கும் திட்டத்தின் இரண்டாம்கட்ட தகவல் கணக்கெடுப்பு பணிகள் ஜூலை15முதல்30வரை முன்னெடுக்கப்படவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

முதலாம் கட்டத்தில் தகுதி பெற்ற 18 இலட்சத்துக்கும் அதிகமானோரைத் தவிர இரண்டாம் கட்டத்திற்காக 450,924 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறப்பட்டுள்ளன. அவற்றில் நலன்புரி நன்மைகள் பெறத் தகுதியானவர்களை இனங்காணும் பணிகள் இம்மாதத்திற்குள்நிறைவு செய்யப்படும்.

அஸ்வெசும திட்டத்தின் முதல் கட்டத்திற்கு 1,854,000 பேர்தகுதிபெற்றுள்ளனர். இதற்காக58.5பில்லியன் ரூபா அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது. முதல்கட்டத்திற்கு ☞8

# சட்டமூலம் நிறைவேற்றம்

இலங்கைத்தொலைத் தொடர்பு (திருத்தச்) சட்டமூலம்திருத்தங்களுடன் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு விவாதம் முடிவடைந்ததும் வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குழு நிலையில் சட்டமூலத்திற்கானதிருத்தங்கள்முன்வைக்கப்பட்டு மூன்றாவது மதிப்பீடு வாக்கெடுப்பின்றி ☞8

### பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட

# போக்குவரத்து ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

நாட்டில் போக்குவரத்து சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது சட்ட விரோதமானதாகும் எனவே பணிக்கு ☞8

# நாட்டின் உறுதிப்பாட்டைச் சீர்குலைக்கும் பணிப் புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளனர்

## சீறுகிறார் வஜிர அபேவர்த்தன எம்.பி.

தேர்தலில் வெற்றி பெற முடியாத சில தரப்பினர் நாட்டின் உறுதிப்பாட்டைச் சீர்குலைக்கும் வேலை நிறுத்தங்களை ஆரம்பித்து வருவதாக நாடாளுமன்றஉறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரத்திற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு ஆளும் தரப்பும்ம் நாட்டுக்காக அதிகபட்ச பணிகளைச் செய்தது என்பதை நாம் அனைவரும்நினைவில் கொள்ள வேண்டும். ஆனால்பலவீனங்களும் இருந்தன. எவ்வாறாயினும், சுதந்திரத்தின் பின்னர் தொடர்ச்சியாக இருந்த ஆட்சியின் பலவீனங்களைத் தீர்க்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கநடவடிக்கை எடுத்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி, அரசியலமைப்பின் 27, 28 மற்றும் 29 ஆகிய பிரிவுகளை பொறுப்புக் கூறக்கூடிய வகையில் பொருளாதார மாற்ற சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். 165 பக்கங்களைக் கொண்ட இந்த சட்ட மூலம் இரண்டுகோடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 148, 149, 150, 151, 152 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொதுமக்களால் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினரின்முக்கியபொறுப்பு அரச நிதி தொடர்பான பொறுப்பாகும்.

அரசியல் கட்சிகள் அவ்வப்போது வெளியிடும்பொய்யான அறிக்கைகளால் அந்த நிதிப் பொறுப்பு வலுவிழக்கிறது. அந்த நிலையைத் தடுக்கும் வகையில், அரசியல் கட்சிகள்கூறுகின்ற ☞8

# சட்டத்தரணிகள் சங்க கடிதத்துக்கு ஜனாதிபதியின் செயலர் பதில்

முன்னாள் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் ஓய்வு பெற்றதையடுத்து புதிய சட்டமாஅதிபர்நியமனம் தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்கவுக்கு அனுப்பியிருந்த கடிதமொன்றுக்கு, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பதில் கடிதமொன்றை ☞8

# முன்னாள் எம்.பிக்களின் தலைவராக கரு தெரிவு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின்ஒன்றியத்தின் முதலாவது கூட்டம் சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் ☞8

### தொழிலாளர்கள் சிறுதோட்ட முதலாளிகளாகும் வரை

# ஆயிரம் ரூபாய் சம்பளத்தை ஏற்றுக்கொள்ளவே முடியாது

### அமைச்சர் ஜீவன் திட்டவட்டம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றும்வரை அவர்களை ஆயிரம் ரூபாய் சம்பளத்துடன் வைத்திருக்க முடியாது என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு சம்பந்தமாக கருத்துவெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2024ஆம் ஆண்டில் இதுவரை பெருந்தோட்ட நிறுவனங்கள் பேச்சு நடத்த முன்வரவில்லை. சில பெருந்தோட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றவேண்டும் என்று கூறுகின்றார்கள். அதனையே நாமும் கூறுகின்றோம்.

ஒரு இலட்சத்து 15 ஆயிரம் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதாக இருந்தால் ஒரே இரவில் அவ்வாறு செய்ய முடியாது. அதற்கு மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் செல்லும். அதுவரையில் தொழிலார்களை ஆயிரம் ரூபா சம்பளத்துடன் மட்டுப்படுத்தி வைக்க முடியாது.

1700 ரூபாய் சம்பள உயர்வு வழங்குவதற்கு தடை என்று நீதிமன்றம் கூறவில்லை. அடுத்த மாதத்துக்குள் உரிய ஆதாரங்களை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

16 வருடங்களாக 19 பெருந்தோட்ட நிறுவனங்களும் நட்டத்தில் இயங்குவதாகவே கூறுகின்றார்கள். ஆனால் அவை இலாபத்திலேயே இயங்குகின்றன. ஒவ்வொரு தடவையும் நாடாளுமன்றுக்கு வருகை தந்து எமக்கு திரும்பத்திரும்ப அறிக்கையை வாசித்துக்கொண்டு இருக்க முடியாது.

அதுமட்டுமன்றி 1700ரூபா சம்பள உயர்வை எதிர்ப்பவர் யார் என்று பார்க்கையில் அவர் ஒரு ஜனாதிபதி வேட்பாளராக இருக்கின்றார். அவர் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்து இரண்டு வருடங்களாகியுள்ளபோதும் ஒருதடவையேனும் நாடாளுமன்றில் உரையாற்றியது கிடையாது. அவர்தான் சம்ப உயர்வுக்கு எதிராக இருக்கின்றார். தோட்டங்களையே நிர்வகிக்க முடியாத ஒருவரால் எவ்வாறு நாட்டை நிரூபிக்க முடியும்? அதற்குள் ஜனாதிபதியாக வேண்டும் என்ற கனவு வேறுள்ளளது என்றார்.

## இந்திய தூதர் – அனுர நேற்று சந்தித்து பேச்சு

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுடன் கொழும்பில் பேச்சு நடத்தினார்.

திசாநாயக்கவின் அரசியல் பிரசாரம் மற்றும் இலங்கையில் தேர்தல் போக்குகள் குறித்து உயர்ஸ்தானிகரிடம் கலந்துரையாடியதாக கொழும்பில் உள்ள இந்திய உயர் ஆணையரகம் தெரிவித்துள்ளது. பல்வேறு இருதரப்பு முயற்சிகள் குறித்து உயர் ஆணையர் அனுரகுமார திஸாநாயக்கவிடம் விளக்கமளித்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறுக்கம் தளர்ந்த நீதி அமைச்சர்

தனது சிறப்புரிமை மீறப்பட்ட விவகாரத்தில் நீதிபதிகளுக்கு எதிராக இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கவில்லை என்றும் தற்போதைக்கு நீதிபதிகளை, நாடாளுமன்ற சிறப்புரிமை மீறல்குழுவிற்கு முன்னாள் அழைக்க வேண்டும் எனக் கோரவில்லை என்றும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்

நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்புக் கூற்றை முன்வைத்து உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதிபதிகளின் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டும். அவர்களின் கண்ணியத்தைப் பாதுகாக்க வேண்டும். நீதிச்சேவை ஆணைக்குழு சமர்ப்பித்த ஆவணத்தை நான் முழுமையாக ஆய்வு செய்யவில்லை. தேவைப்பட்டால் அது தொடர்பில் ஆராய்ந்து பதிலளிக்கின்றேன்.

எனது சிறப்புரிமையைப் பாதிக்கும் வகையில் ஊடக அறிக்கைகளை வெளியிட்ட இரு நீதிபதிகளையும் சிறப்புரிமைக் குழுவிற்கு அழைக்கவேண்டும். ஆனாலும் நீதிச்சேவை ஆணைக்குழு பதிலளித்துள்ளமையால் நான் கோரிக்கைகள் எவற்றையும் முன்வைக்கவில்லை.

எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை அடிப்படையகக் கொண்டு அடுத்த கட்டமாக கோரிக்கைகளை முன்னெடுப்பேன். ஆகவே தற்போதைக்கு நீதிபதிகளை சிறப்புரிமை மீறல்குழுவிற்கு முன்னாள் அழைக்க வேண்டும் என்று கோரவில்லை என்றார்.

### இனி இது .....

தற்போதைய நாடாளுமன்றத்திற்கு இன்னும் அதிகபட்சம் 6 மாதங்களே எஞ்சியிருக்கும் நிலையில், கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக, அனுபவ மூப்பின் அடிப்படையில் செல்வம் நியமிக்கப்படவேண்டும் என்பது ரெலோவின் நிலைப்பாடு. சித்தார்த்தனும் அதனை ஆதரிக்கிறார். எனினும் கூட்டமைப்புக்குள் அதிக ஆசனங்களைக் கொண்டிருக்கக்கூடிய தமிழ் அரசுக் கட்சியே அதனைத் தீர்மானிக்க முடியும். அது அந்தப் பதவியைத் தானே வைத்துக்கொள்வது என்று முடிவெடுத்து ஒற்றுமையுடன் செயற்பட்டால் சம்பந்தனுக்குப் பதில் மற்றொரு தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரே தலைவராகவரமுடியும். இருப்பினும் அந்தப் பதவியை செல்வத்திற்குக் கொடுப்பதற்குதமிழ்அரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் இணக்கம் தெரிவித்திருக்கிறார் என்றும் இன்றைய கூட்டத்தில் செல்வத்திற்கு ஆதரவளிக்கும்படி அவர் சிலதமிழ்அரசுநாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டிருக்கிறார் என்றும் தெரியவந்தது.

கட்சியின் மத்திய குழுவோ அரசியல் குழுவோ கூடி ஆராயாமலேயே மாவையர் எடுத்திருக்கக்கூடிய இந்த முடிவுக்கு கட்சியில் எத்தகைய எதிர்வினை கிட்டும் என்பது தெரிந்ததே. அதனால் கட்சியின் முடிவைத் தெரிந்துகொண்டுதான் இந்த விடயத்தில் தமது முடிவைத் தெரிவிக்கலாம் என்று இன்றைய கூட்டத்தில்தமிழ்அரசுக்கட்சியின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்களாவது கருத்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் உள்ளது.

எனக்குஒரேஒருசந்தேகம்தான். கூட்டமைப்பில்இருந்துதமிழ்அரசுக் கட்சி தானாக வெளியேறிவிட்டது என்று அறிவித்த முதல் தரப்பு ரெலோதான். அதனால்தான் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைக் கூட்டமைப்பு என்று மக்கள் முன் பரப்புரை செய்தார்கள். புளொட்டும் அதனுடன் கூடச் சேர்ந்துநின்றது. அப்படியிருக்கும்போது இப்போது மட்டும் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைமைக்கு கூட்டமைப்பு என்று எப்படி ரெலோவால் பெயர் சூட்ட முடிகிறது? புளொட்டால் அதற்கு ஆதரவு தெரிவிக்க முடிகின்றது? பதவி என்று வந்துவிட்டால் எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பேசலாம், செயற்படலாம் என்பதுதான் தமிழ்த் தலைமைகளின் ஒரே எண்ணம், நோக்கம், சிந்தனை எல்லாம் என்பது நிரூபணமாகின்ற மற்றொரு தருணம் இது. கொடுமை என்னவென்றால், இவை எல்லாவற்றையும் அவர்கள் மக்களின் நலனுக்காகத்தான் செய்கின்றோம் என்று மக்களின் தலையிலேயே மிளகாய் அரைப்பதுதான்.

சாவகச்சேரியில் மக்கள் கிளர்ந்தது போன்று இத்தகைய அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் கிளர்ந்து எழாதவரைக்கும் இவர்களின் மிளகாய் அரைத்தல் தொடர்ந்துகொண்டேதான் இருக்கப்போகிறது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

### பிணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகள் எப்போதும் முடிவடையும் என்ற கேள்விக்கு அடுத்தசிலவாரங்களில் என எதிர்பார்க்கின்றோம் என அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

ஆசியாவில் தங்களுக்குள் போட்டியிடும் இரு பெரும் நாடுகளும் இலங்கைக்கு அதிகளவு கடன்களை வழங்கியுள்ளதுடன் முக்கிய முதலீட்டாளர்களாக காணப்படுகின்றநிலையில், இலங்கையில் புவிசார் அரசியல் ஆதிக்கம் செலுத்துவதற்காக போட்டியிடுகின்றசூழ்நிலையிலேயே, இலங்கையின் வெளிவிவகார அமைச்சரின் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

இந்த மாத இறுதியில் நாங்கள் உத்தியோகபூர்வமாக கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளை பூர்த்திசெய்துவிடுவோம் என தெரிவித்துள்ள அவர் அதன் பின்னர் அதனடிப்படையில் நாங்கள் பணம் செலுத்த ஆரம்பிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது பிணைமுறிகளை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளில் முன்னோக்கி செல்வதற்கு அதன் பிணைமுறி உரிமையாளர்கள் சிலருடன் தற்காலிகஉடன்படிக்கையைசெய்து கொண்டுள்ளது. தற்போது ஏனைய தனியார் கடன்வழங்குநர்களும் சர்வதேசநாணயநிதியமும்அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இலங்கை 37பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு கடனைசெலுத்தவேண்டியநிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜூன்மாதஇறுதியில்10மில்லியன் டொலர் கடன்மறுசீரமைப்பிற்கான இணக்கப்பாட்டை இந்தியா சீனா ஜப்பான் போன்ற நாடுகளுடன் இலங்கை எட்டியது.

### கொக்குத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான சர்வதேசஅமைப்புப் பிரதிநிதிகளின் கண்காணிப்பு விஜயத்தால் தமக்கு இந்த அகழ்வாய்வின்மீது நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாகவும், இந்த அகழ்வாய்வின்மீது தொடர்ந்தும் சர்வதேச கண்காணிப்பு அவசியமெனவும்தமிழ்தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாம்கட்ட, ஐந்தாம்நாள்அகழ்வாய்வுப்பணிகள் தொல்லியல்துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவதலைமையிலான குழுவினரால்முன்னெடுக்கப்பட்டது.

அத்தோடு ஐ.நாவின் இலங்கை அலுவலக மனிதஉரிமை அலுவர் லுடியானா ஷெல்ரின் அகிலன், முல்லைத்தீவுமாவட்டசட்டவைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, சட்டத்தரணி கே.எஸ்.நிரஞ்சன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கொக்கிளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கொக்குத்தொடுவாய் கிராம அலுவலர் உள்ளிட்ட தரப்பினரின் கண்காணிப்புகளுக்கு மத்தியிலும் இந்த அகழ்வாய்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த ஐந்தாம் நாள் அகழ்வாய்வுப்பணிகளில் முல்லைத்தீவு - கொக்கிளாய் பிரதானவீதியின் ஐந்தாவது மண்படை அகழப்பட்டு அகழ்வாய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த ஐந்தாம்நாள் அகழ்வாய்வுகளில் சில மர்மப்பொருட்கள் பகுதியளவில் வெளிப்பட்டுத் தென்படுவதாக இந்த அகழ்வாய்வு கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள சட்டத்தரணி எஸ்.நிரஞ்சன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். ஆறாம்நாள் அகழ்வாய்வுப் பணிகளின் பின்னரே குறித்த மர்மப்பொருட்கள் என்ன என்பதை முழுமையாக இனங்காணமுடியும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை இந்த மனிதப்புதைகுழி இனங்காணப் பட்டதிலிருந்து,இந்தமனிதப்புதைகுழி அகழ்வாய்வு விவகாரத்திற்கு சர்வதேச கண்காணிப்பு அவசியம் என்பதை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், தமிழ் மக்கள்பிரதிநிதிகள் தொடர்ச்சியாக வலியுறுதனதிவருகின்றனர்.

இந்நிலையில் மனிதப்புதைகுழியின்முன்றாம்கட்ட, ஐந்தாம்நாள் அகழ்வாய்வுப்பணி இடம்பெறும்போது குறித்தஇடத்திற்கு ஐ.நா இலங்கை அலுவலக மனிதஉரிமை அலுவலரின் கண்காணிப்புவிஜயம் குறித்து, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின்முல்லைத்தீவுமாவட்டத் தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில், இவ்வாறான சர்வதேசபிரதிநிதிகள்கண்காணிப்பது இந்த அகழ்வாய்வின்மீது தமக்கு நம்பிக்கை ஏற்படுவதாக அமைவதாகவும், தொடர்ந்தும் இந்த மனிதப்புதைகுழி அகழ்வாய்வில் சர்வதேச கண்காணிப்பு தொடர்ந்தும் இருக்கவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### சாவகச்சேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலைக்கு வைத்திய அத்தியட்சகராக கடந்த ஜீன் மாதம் நியமிக்கப்பட்ட வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன், அங்கு நிலவி வந்த நிர்வாக சீர்கேடுகளையும், குறைபாடுகளையும் அடையாளம் கண்டு அவற்றைச் சீர்செய்வதற்குத் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

அதனடிப்படையில், பெண் நோயியல் பிரிவு, சந்திர சிகிச்சை பிரிவு, ஐ.சி.யு. பிரிவு ஆகியவற்றைச் செயற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட 3 மாடிக் கட்டிடம் கடந்த 14 வருடங்களாகப் பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், நன்கொடையாளரினால் வழங்கப்பட்ட 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான சத்திர சிகிச்சை உபகரணங்களும் பயன்படுத்தப்படாமல் இருந்த நிலையில், அவற்றைச் செயற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட வைத்திய அத்தியட்சகர், முதற் கட்டமாக ஐ.சி.யு. மற்றும் மகப்பேற்றுப் பிரிவு ஆகியவற்றைச்செயற்படுத்தியுள்ளார்.

மேலும், சந்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய நோயாளர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுவந்தநிலையில்சத்திர சிகிச்சைபிரிவை இயக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அதேபோன்று, குறித்த வைத்தியசாலையில் உயிரிழப்பவர்களின் உடல்கள், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில், அதனை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில்மேற்கொண்டு, பொது மக்களுக்கு ஏற்பட்டு வந்த தேவையற்றஅசௌகரியங்களைத் தடுப்பதற்கும்வைத்தியஅத்தியட்சகர் அர்ச்சுனாவினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், மருந்துப் பொருட்கள் உரிய களஞ்சியப்படுத்தல் ஏற்பாடுகள் இன்றி, தரையில் போடப்பட்டிருந்ததுடன், குறித்த வைத்தியசாலையில் 22 வைத்தியர்கள் கடமையாற்றி வந்ததுடன், அவர்களுள் பெரும்பாலானவர்கள், மாதத்தில் 10 நாட்கள் மாத்திரமே வைத்தியசாலையில் கடமையாற்றியுள்ளனர்.

இவ்வாறான பல்வேறு சீர்கேடுகள்மற்றும்குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு வைத்திய அத்தியட்சகர் முன்னெடுத்த முயற்சிகளை விரும்பாத சக்திகள், அங்கு தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளன.

இவை அனைத்தையும் அறிந்து கொண்ட பொது மக்கள் பாரிய போராட்டம் ஒன்றினையும் முன்னெடுத்தனர்.

எனவே, குறித்த விவகாரம் தொடர்பில் உயர்மட்ட குழு அமைக்கப்பட்டு நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட அனைவரும் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட வேண்டும்' என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# சாவகச்சேரி வைத்தியசாலையில் பொறுப்பற்று செயற்பட்டவர்கள் தண்டிக்கப்படல் வேண்டும்

## அமைச்சரவையில் அமைச்சர் டக்ளஸ்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வினைத் திறனுடன் இயங்குவதை விரும்பாத சக்திகளே கடந்த சில தினங்களாக அங்கு நிலவிய அசாதாரண சூழலுக்கும், மக்கள் போராட்டத்திற்கும் காரணம் என்று அமைச்சரவையில் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விசாரணைக் குழு அமைக்கப்பட்டு , சீர்கேடுகளுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சரால் முன்வைக்கப்பட்ட குறித்த விடயத்தை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது.

குறித்த கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தவை வருமாறு -

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வைத்திய அத்தியட்சகராக கடந்த ஜீன் மாதம் நியமிக்கப்பட்ட வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன், அங்கு நிலவி வந்த நிர்வாக சீர்கேடுகளையும், குறைபாடுகளையும் அடையாளம் கண்டு அவற்றைச் சீர்செய்வதற்குத் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

அதனடிப்படையில், பெண் நோயியல் பிரிவு, சந்திர சிகிச்சை பிரிவு, ஐ.சி.யு. பிரிவு ஆகியவற்றைச் செயற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட 3 மாடிக் கட்டடம் கடந்த 14 வருடங்களாகப் பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், நன்கொடையாளரால் வழங்கப்பட்ட 20 மில்லியன் ரூபா பெறுமதியான சத்திர சிகிச்சை உபகரணங்களும் பயன்படுத்தப்படாமல் இருந்த நிலையில், அவற்றைச் செயற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட வைத்திய அத்தியட்சகர், முதற் கட்டமாக ஐ.சி.யு. மற்றும் மகப்பேற்றுப் பிரிவு ஆகியவற்றைச் செயற்படுத்தியுள்ளார்.

மேலும், சந்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய நோயாளர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில் சத்திர சிகிச்சை பிரிவை இயக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அதேபோன்று, குறித்த வைத்தியசாலையில் உயிரிழப்பவர்களின் உடல்கள், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில், அதனை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மேற்கொண்டு, பொது மக்களுக்கு ஏற்பட்டு வந்த தேவையற்ற அசௌகரியங்களைத் தடுப்பதற்கும் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனாவால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், மருந்துப் பொருள்கள் உரிய களஞ்சியப்படுத்தல் ஏற்பாடுகள் இன்றி, தரையில் போடப்பட்டிருந்ததுடன், குறித்த வைத்தியசாலையில் 22 வைத்தியர்கள் கடமையாற்றி வந்ததுடன், அவர்களுள் பெரும்பாலானவர்கள், மாதத்தில் 10 நாள்கள் மாத்திரமே வைத்தியசாலையில் கடமையாற்றியுள்ளனர்.

இவ்வாறான பல்வேறு சீர்கேடுகள் மற்றும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு வைத்திய அத்தியட்சகர் முன்னெடுத்த முயற்சிகளை விரும்பாத சக்திகள், அங்கு தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளன.

இவை அனைத்தையும் அறிந்து கொண்ட பொது மக்கள் பாரிய போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர்.

எனவே, குறித்த விவகாரம் தொடர்பில் உயர்மட்ட குழு அமைக்கப்பட்டு நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட அனைவரும் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட வேண்டும். - என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# மயிலத்தமடு கால்நடை பண்ணையாளர்கள் 300ஆவது நாள் கவனவீர்ப்புப் போராட்டம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு மாதவனை பகுதி கால்நடை பண்ணையாளர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) அமைதியான முறையில் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு சித்தாண்டியில் மயிலத்தமடு மாதவனை பகுதியில் பெரும்பான்மையினத்தவர்களினால் முன்னெடுக்கப்படும் மேய்ச்சல் தரை அபகரிப்பினை தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தித் தொடர்ந்து போராடிவரும் கால்நடை பண்ணையாளர்கள் தாங்கள் போராட்டம் ஆரம்பித்து 300வது நாளான இன்று இந்த கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்றைய மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பண்ணையாளர் சங்கத்தலைவர் நிமலன் தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் இணைப்பாளர்களான வேலன் சுவாமிகள், அருட்தந்தை ஜெகதாஸ், எஸ். சிவயோகநாதன் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர் அருட்தந்தை லூத் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தமது மேய்ச்சல் தரை காணிகள் அபகரிக்கப்பட்டு தமது வாழ் வாதாரம் முற்றாகப் பறிக்கப்பட்டுள்ள நிலையில் அங்குள்ள அத்துமீறிய குடியேற்றக்காரர்களை வெளியேற்றுமாறு வலியுறுத்தும் வகையில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியில் உள்ள அத்துமீறிய குடியேற்றக்காரர்களை வெளியேற்றுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மாவட்ட அரசாங்க அதிபருக்குப் பணிப்புரைகளை வழங்கியபோதிலும் இதுவரையில் அவர்கள் வெளியேற்றப்படவில்லையெனவும் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மயிலத்தமடு மாதவனை பகுதியில் பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் அங்குள்ள அத்துமீறிய குடியேற்றக்காரர்களை அங்கிருந்து அகற்றுமாறு நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளைக் கூட அமுல்படுத்த முடியாத வகையில் பொலிஸார் உள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் ஒரு கம்பு வெட்டினாலும் கைதுசெய்து வழக்கு தாக்கல் செய்யும் அதிகாரிகள் அங்கு அத்துமீறிய செயற்பாடுகளை முன்னெடுப்போர் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லையெனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

மேய்ச்சல் தரை காணிப்பிரச்சினையை தீர்க்கும் வகையில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக காணிகளை வழங்கவும் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் குளங்களைப் புனரமைக்கவும் வீதிகளை புனரமைக்கவும் நடவடிக்கையெடுப்பதாக தெரிவிக்கப்பட்டபோதிலும் இதுவரையில் எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லையென இங்கு பண்ணையாளர்களினால் தெரிவிக்கப்பட்டது.

நாங்கள் தனி நாட்டுக் கோரிக்கைக்காகப் போராடவில்லை எமது கால்நடைகள் மூலம் நாங்கள் வாழவேண்டும் என்பதற்காகவே 300 ஆவது நாளாகப் போராடுகின்றோம். எமது போராட்டத்திற்கான நியாயத்தினை ஜனாதிபதி மற்றும் மகாவலி அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டு எமக்கான தீர்வை வழங்குவதாக உறுதியளித்தபோதிலும் இதுவரையில் எங்களுக்கு எந்த தீர்வும் வழங்கப்படவில்லையெனக் கால்நடை பண்ணையாளர் அமைப்பின் தலைவர் நிமலன் தெரிவித்தார். (05)

# பணிப்புறக்கணிப்புச் செய்யாத அரச ஊழியர்களுக்கு கௌரவம்

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை சரியாகப் புரிந்துகொண்டு, மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் செயற்பட்டு, 2024 ஆம் ஆண்டு ஜூலை 08 மற்றும் 09 ஆம் திகதிகளில் கடமைக்கு சமுகமளித்த நிறைவேற்றுத் தரம் அல்லாத அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் விசேட சம்பள உயர்வொன்றை வழங்குவதற்கும், அவர்கள் அனைவருக்கும் எதிர்கால பதவி உயர்வுகளுக்குப் பயன்படுத்தும் வகையில் விசேட பாராட்டுச் சான்றிதழொன்றை வழங்குவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் நேற்று (செவ்வாய்க்கிழமை) முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக அனைத்து அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாகாண பிரதான செயலாளர்களுக்கு அறிவிக்குமாறும் அது தொடர்பிலான சுற்றுநிருபம் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

அரச சேவையின் நிறைவேற்றுத் தரம் அல்லாத சில சேவைகளில் உள்ள ஒரு சில தொழிற்சங்கங்கள் 2024 ஜூலை 08 மற்றும் 09 திகதிகளில் சுகவீன விடுமுறை மற்றும் வேலைநிறுத்தத் தொழிற்சங்க நடவடிக்கைகளை அறிவித்திருந்தன.

கடுமையான பொருளாதார ஸ்திரமின்மையை எதிர்நோக்கியிருந்த நாடு கடந்த இரண்டு வருடங்களில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட விரிவான பொருளாதார கொள்கை சீர்திருத்த வேலைத்திட்டத்தின் ஊடாக ஓரளவு ஸ்திரப்படுத்த முடிந்ததுடன், மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளுக்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவையும் அரசாங்கம் வழங்கியது.

தற்போதைய நிதி நிலைமையின் கீழ், மக்கள் மீது கூடுதல் வரிச்சுமையை சுமத்தாமல், முழு அரச சேவைக்கும் தற்போது வழங்கப்படும் சம்பளத்திற்கு மேலதிகமாக சம்பள அதிகரிப்பையோ கொடுப்பனவுகளையோ வழங்குவதற்கு சாத்தியமில்லை எனவும் திறைசேரி செயலாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் கடுமையான பொருளாதார அழுத்தத்தில் இருந்த மக்கள்மீது மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தும் முடிவுகளை எடுக்கும் இயலுமை அரசாங்கத்திற்கு இல்லை. மறுபுறம், சில அரச ஊழியர்கள் மேலதிக சம்பளம் மற்றும் கொடுப்பனவுக் கோரிக்கைகளை முன்வைத்து பொதுமக்கள் அனைவரையும் அசௌகரியத்திற்கு உள்ளாக்குவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

எவ்வாறாயினும், இதுபோன்ற நியாயமற்ற பணிப் புறக்கணிப்புக்களைச் செய்யாமல், 2024 ஜூலை 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் பணிக்கு சமுகமளித்த நிறைவேற்றுத் தரம் அல்லாத அரச உத்தியோகத்தர்களைப் பாராட்டுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.(05)

# உயிரினங்களை கடத்த முற்பட்ட ஐவர் பேர் படகு ஒன்றுடன் கைது



இலங்கையின் உயிரினங்களை பிடித்து வெளிநாட்டுக்கு கடந்த முற்பட்ட ஐந்து பேர் மீன்பிடி படகு ஒன்றுடன் 7 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு மற்றும் கொச்சிக்கடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 34 மற்றும் 67 வயதுடைய ஐந்து நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் மற்றும் கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரிகளால் தென் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணித்த மீன்பிடி படகிலிருந்து 13 மலைப்பாம்புகள், ஒரு உடும்பு , ஒரு பெரிய ஆமை மற்றும் 3 கிளிகள் ஆகிய உயிரினங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.





கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் காலி துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக ஹிக்கடுவை வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.(05)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சுயாதீன விசாரணையின் அவசியம்

அண்மைக் காலத்தில் யாழ். குடாநாட்டில் மக்களிடம் சர்ச்சையை ஏற்படுத்திய இரண்டு விடயங்கள் தொடர்பில் நீதியான, தீர்க்கமான, சுயாதீனமான விசாரணை இடம்பெறுவது அவசியமாகின்றது.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் இயங்கும் சிவபூமி அறக்கட்டளை சார்ந்த சிறுவர் மற்றும் மகளிர் இல்லங்கள் தொடர்பில் எழுந்த சர்ச்சை முதலாவது மற்றையது சாவகச்சேரி ஆதார மருத்துவமனை தொடர்பில் எழுந்த சர்ச்சை. இவை இரண்டுமே தமிழ் மக்களிடையே பெரும் பேசு பொருளாகவும் கவனத்திற்குரியதாகவும் இருந்திருக்கின்றன.

சிறுவர் இல்லங்கள் தொடர்பான விடயத்தில் அரச கண்காணிப்புப் பொறிமுறையின் வழக்கமான நடவடிக்கை ஒன்று, ஆறு திருமுருகன் மீதான சேறடிப்பாகத் திசை திருப்பப்பட்டமை மக்களிடையே கோபத்தையும் எதிர்ப்புணர்வையும் தோற்றுவித்திருக்கின்றது. ஒரு நிறுவனத்தின் தலைவர் என்பதற்காக அவர் மீது ஆதரமற்ற வகையில் சேறடிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவருக்கு நீதியும் நிவாரணமும் கிடைக்கவேண்டும்.

அதேநேரம், ஆறு திருமுருகனின் பெயரை உள்ளே இழுத்து வந்த விவகாரத்தில் இரண்டு சிறுவர் இல்லங்கள் தொடர்புபட்டிருந்தன. அவை பற்றிய சில பல குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டிருந்தன என்பது ஆளுநர் அலுவலகம் வரைக்கும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ஆறு திருமுருகன் விவகாரத்தால் அந்தச் சிறுவர் இல்லங்களின் மீதான அரச கண்காணிப்புப் பொறிமுறை சிதைக்கப்படும் நிலை தோன்றியிருப்பது ஏற்புடையதல்ல.

ஆறுதிருமுருகன் மீதான சேறடிப்புக்கு அவருக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்பதை ஆதரித்து நிற்கும் அதேநேரம், அந்த விவகாரத்தால் சிறுவர் இல்லங்களின் மீதான அரச கண்காணிப்பு மழுங்கடிக்கப்படவோ சிதைக்கப்படவோ கூடாது என்கிற அக்கறையையும் வெளிப்படுத்த வேண்டியுள்ளது. போர் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் பின்னர் வடக்கு கிழக்கில் பல சிறுவர் இல்லங்கள் இயங்கிவரும் நிலையில் அவற்றின் சீரான செயற்பாட்டுக்கு அரச கண்காணிப்புப் பொறிமுறை மிக மிக அவசியம். அதன் இறுக்க நிலை நன்கு பேணப்படவேண்டியது முக்கியம்.

ஆறு திருமுருகன் விவகாரம் தனிப்பட்ட மற்றும் சமய ரீதியான பழிவாங்கல் என்கிற வகையில் திசை திரும்பியிருக்கும் நிலையில் பலரும் அதன் மீதே கவனத்தைச் செலுத்தி கண்டனங்களையும் தெரிவித்து வருகின்றார். அது செய்யப்படவேண்டியதொன்றே. அதேநேரம் ஆதரவற்ற சிறுவர்களின் எதிர்காலத்தைப் பாதிப்பதாக அது மாறிவிடக்கூடாது என்கிற அக்கறை அனைவருக்கும் இருக்கவேண்டும். இதனால் நடந்தது என்ன, ஆறு திருமுருகன் சார்ந்தது அல்லாமல் மற்றொரு சிறுவர் இல்லமும் இதில் சம்பந்தப்பட்டிருக்கும் நிலையில் உண்மையில் என்ன நடந்தது? எதனால் இந்தச் சர்ச்சை எழுந்தது? அதற்கு உயிர்நாடியான விவகாரம் எது என்பது தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட்டு உண்மை மக்களுக்கு வெளிப்படுத்தப்படவேண்டும்.

அதேபோன்றே சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை தொடர்பான விவகாரத்திலும் சுயாதீனமான விசாரணை ஒன்று நடத்தப்பட்டு உண்மைகள் வெளிக்கொணரப்படவேண்டும். இந்த விடயம் தற்காலிகமாகத் தணிந்துபோய்விட்டதுஎன்றாலும், அதன் தாக்கம் காரணமாக அந்த வைத்தியசாலையில் பணிபுரிந்த மருத்துவர்கள் பலர் தமது பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர் என்று அறியமுடிந்தது. இது அந்தப் பகுதி மக்களின் சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்வதில் எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். அத்தோடு இந்த விவகாரத்தில் இரு தரப்பினரிடமிருந்தும் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. எனவே அவை தொடர்பிலும் சுயாதீனமான விசாரணை ஒன்று நடத்தப்பட்டு உண்மை மக்களுக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும்.

சுகாதாரத் துறை மீதும் சமய, நற்பணிகளின் மீதும் மக்களின் நம்பகத் தன்மையை தக்க வைப்பதற்கு இந்தச் சுயாதீன விசாரணைகள் மிக அவசியமானவை என்பதை அனைத்துத் தரப்பினரும் புரிந்து ஏற்று ஒத்துழைப்பது அவசியம்.



# அவசியம் ஆரோக்கியமான உணவுத் தேர்வு!

**வி.நாகராஜன்**

மக்கள் எண்ணிக்கைப் பெருக்கம், தொற்றுநோய், போர் ஆகியவற்றால் உலக அளவில் பட்டினியால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 82.8 கோடியாக உயர்ந்துள்ளது என்கிறது உலக சுகாதார நிறுவனம்.

உலக மக்கள்தொகையில் 29.3% பேர் என்ற அளவில் கடுமையான உணவுப் பாதுகாப்பின்றி இருந்தனர். பசியால் பாதிக்கப்பட்டவர்களின் விகிதம் 2021-இல் உலக மக்கள் தொகையில் 9.8 சதவீதமாக உயர்ந்தது. இது 2020-இல் 9.3 சதவீதமாக இருந்தது. ஐந்து வயதுக்கு உள்பட்ட நாலரை கோடி குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஊட்டச்சத்துக் குறைபாடானது, குழந்தைகளின் இறப்பு அபாயத்தை 12 மடங்கு அதிகரித்திருக்கிறது. 5 வயதுக்கு உட்பட்ட 14.9 கோடி குழத்தைகள் தங்கள் உணவில் அத்தியாவசிய ஊட்டச் சத்து இல்லாததால் வளர்ச்சி குன்றியிருந்தனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

உணவு மூலம் பரவும் நோய்களால் ஒவ்வொரு ஆண்டும் 4 லட்சத்து 20ஆயிரம் இறப்புகள் ஏற்படுவதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது. ஜெர்மனியைச் சேர்ந்த ஓர் ஆய்வு நிறுவனம், பசியின் தாக்கத்தால் ஒவ்வொரு 13 வினாடிக்கும் ஒரு குழந்தை இறக்கிறது என்கிறது.

பழங்கள், காய்கறிகள், தானியங்களை எடுத்துக் கொள்வது குறைந்து, பதப்படுத்தப்பட்ட இறைச்சி, இனிப்பு சுவை நிறைந்த குளிர்பானங்களை அதிக அளவில் எடுத்துக் கொள்ளும் நிலை இந்தியாவில் அதிகரித்து வருகிறது.

இன்று உலகின் 5-ஆவது மிகப் பெரிய பொருளாதார சக்தியாக நாம் உயர்ந்துள்ளபோதிலும், இந்தியர்களில் 71% பேருக்கு போதிய ஊட்டச்சத்து உணவு கிடைப்பதில்லை என சர்வதேச ஊட்டச்சத்து அறிக்கை தெரிவிக்கின்றது. இந்த விஷயத்தில், சர்வதேச சராசரி 42 சதவீதமாக உள்ளது.

உலகளாவிய பசி குறியீடு 2022 தரவரிசையில், 121 நாடுகளில் இந்தியா 107-ஆவது இடத்தில் உள்ளது. உலக மக்கள் தொகைக்குப் போதுமான உணவு உற்பத்தி செய்யப்பட்டாலும், உலகில் 9 பேரில் ஒருவர் பட்டினியால் பாதிக்கப்படுகின்றனர். உலக அளவில் உற்பத்திசெய்யப்படும் உணவில் மூன்றில் ஒருபங்கு வீணாகிறது என உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு சொல்கிறது. உணவு வீணாக்குதல் குறித்த அறிக்கை, ஆண்டொன்றுக்கு சராசரியாக இந்தியர் ஒருவர் 50 கிலோ உணவை வீணாக்குகிறார் என்கிறது.

இந்தியாவில் 20 வயதுக்கு அதிகமானவர்கள் தினமும் 200 கிராம் பழங்களை எடுத்துக் கொள்ள பரிந்துரைக்கப்படுகிறது. ஆனால், 35.8 கிராம் அளவே பழங்களை உட்கொள்கின்றனர். தினமும் 300 கிராம் அளவு காய்கறிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், 168.7 கிராம் அளவு காய்கறிகளையே எடுத்துக் கொள்கின்றனர். ஆரோக்கிய உணவுக்கான செலவு ஒரு நபர் ஈட்டும் வருவாயில் 63 சதவீதத்தை தாண்டும்போது, அது சாத்தியமில்லாத ஒன்றாகிவிடுகிறது என உணவு மற்றும் வேளாண் அமைப்பு தெரிவிக்கிறது.

இன்று கிராமம், நகரம் என்கிற பேதம் இல்லாமல் துரித உணவு கலாசாரம் வந்துவிட்டது. தூக்கலான உப்புச் சுவையுடன் மசாலா கலந்த அதன் சுவைதான் எல்லோரையும் ஈர்க்கிறது. இதில் அடங்கியுள்ள அதிக கொழுப்புகள் மனதை ஒரு மயக்கத்தில் தள்ளுகிறது. ஆனால் அதன் பின் விளைவுகள் குறித்து நாம் கவலை கொள்வதில்லை. தொடர்ந்து துரித உணவு வகைகளை சாப்பிடுபவர்களுக்குப் பல்வேறு நோய்கள் வருவதற்கான ஆபத்துகள் அதிகமாக இருக்கிறது என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

பீட்சா, பர்கர், ஃபிரைட் ரைஸ் ஆகியவை குழந்தைகள், இளைஞர்களுக்குப் பிடித்த உணவுகளாக இருக்கின்றன. இவை அதிகம் கலோரிகள், ஆரோக்கியமற்ற கொழுப்புகள் கொண்டவை. ஊட்டச்சத்து உள்ளடக்கம் குறைவாக இருப்பதால் உடல் ஆரோக்கியத்தை பாதிப்பதுடன், நோய் எதிர்ப்பு சக்தியையும் பலவீனப்படுத்துகின்றன. இதனால் காலப்போக்கில் நீரிழிவு நோய் பாதிப்பு அதிகரிக்கும் என்று சிறப்பு மருத்துவர்கள் கூறுகின்றனர்.

துரித உணவுகளில் உப்பு அதிகமாக இருப்பதால் ரத்த அழுத்தம் ஏற்படுகிறது. மேலும் மனச்சோர்வு, தலைவலி, உடல் சோர்வு, உடல் எடை அதிகரிப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. வயிற்று வலி, மூட்டு வலி, நாக்கு வீங்குதல் போன்ற பாதிப்புடன் நரம்பு செல்களும் பாதிக்கும். ஞாபக சக்தி குறையும். கவனச் சிதறல் ஏற்படும். இந்த உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட்டால் உடலின் ஏனைய உறுப்புகளுக்கும் பாதிப்பு ஏற்படும்.



**நெஞ்செரிச்சல், அதிக அமில சுரப்பு ஏற்படவும் துரித உணவுகளே காரணம்.**

குழந்தைகளுக்கு இரைப்பை அழற்சி, ஊட்டச்சத்துக் குறைபாடு, உடல் பருமன் போன்றவை ஏற்படலாம். படிப்பு, விளையாட்டில் ஆர்வம் குறையும். தாழ்வு மனப்பான்மை ஏற்படும். இதயம் தொடர்பான நோய்களும் வரலாம். இந்த துரித உணவுகளை போல பாக்கெட் உணவுகளும் ஆபத்தானவை. இதை அதிகம் உண்ணும் போது உடலில் நச்சுக்கள் அதிகமாகி அஜீரண கோளாறு, புற்றுநோய், தோல் வியாதி போன்ற நோய்கள் ஏற்படலாம் என்று மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

உணவை வீணாக்குவதைத் தவிருங்கள். தேவையான உணவுப் பொருட்களை பட்டியலிட்டு வாங்குங்கள். குழந்தைகளுக்கு ஆரோக்கியமான உணவை தர வேண்டும். அது சுவை மிகுந்ததாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. சத்தானதாக இருக்க வேண்டும். சமச்சீர் உணவை உண்பதன் முக்கியத்துவம் பற்றிச் சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்கு சொல்லித் தரவேண்டும். ஐ.நா. சபை 2030-ஆம் ஆண்டுக்குள் பசிப் பிணியை முடிவுக்குக் கொண்டுவர உலகளாவிய நோக்கத்தை அமைத்துள்ளது. அதை நோக்கி நமது பயணம் தொடரட்டும்.

# ரிம்ஸா முஹம்மதின் 'இறையச்சம்' சிறுகதை 2 ஆம் இடத்திற்கு தெரிவு



(ஐ. ஏ. காதிர் கான்)

சர்வதேசரீதியாகநடைபெற்ற மறைந்த பன்னூலாசிரியர், எழுத்தாளர், டாக்டர் ஹிமானா சையத்துடைய நினைவுச் சிறுகதைப் போட்டியில், வெலிகம ரிம்ஸா முஹம்மதின் 'இறையச்சம்' என்ற சிறுகதை இரண்டாம் இடத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

கொழும்பு - வெள்ளவத்தை, சைவ மங்கையர் கழகத்தில் இடம்பெற்ற புத்தகக் கண்காட்சி நிகழ்வின் போது, 'எழுத்தாளர் தெணியான்' அரங்கில் நன்னூல் பதிப்பாளர் அப்துல் காதர் கரங்களால் வெலிகம ரிம்ஸா முஹம்மத், 'இறையச்சம்' சிறுகதைக்கான பணப் பரிசிலையும் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, இந்தச் சிறுகதைப் போட்டியில், மலையக எழுத்தாளரான தியத்தலாவ எச்.எப். ரிஸ்னாவின் 'கண்ணீர்' என்ற சிறுகதையும் மூன்றாம் இடத்தைத் தட்டிக் கொண்டது.

நிகழ்வில், நூலாசிரியர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (05)

# இளைஞர் விவசாய தொழில் முனைவோர் கிராமம் வவுனியாவில் நேற்றுத் திறப்பு







வவுனியா மாவட்டத்தில் இளைஞர் விவசாய தொழில் முனைவோர் கிராமம், கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தானால் அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது.

வவுனியா, நாகர்இலுப்பைக்குளத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணியளவில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் தொழில் முனைவோருக்கான விவசாய உபகரணங்கள், கால்நடை வளர்ப்புக்கான பொருள்கள் மற்றும் கோழிக்குஞ்சுகள் என்பன வழங்கிவைக்கப்பட்டதோடு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், பிரதேசசெயலாளர் நா.கமலதாசன், திட்டமிடல் பணிப்பாளர், கிராமசேவையாளர் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# களைகட்டும் கதிர்காமம் கானக பாதயாத்திரை!



வரலாற்று சிறப்புமிக்க கதிர்காம கந்தன் ஆலய ஆடிவேல்விழா உற்சவத்திற்காக வரலாற்றில் முதல் தடவையாக அதிகப் படியான யாத்திரீகர்கள்

கானக பாதயாத்திரையை மேற்கொண்டு வருகின்றனர்.

வரலாற்றில் கானகப் பாதை திறந்த( 30) முதல் நாளில் சுமார் 7000 பாதயாத்திரீகர்கள் பயணித்தமை இதுவே



முதல் முறையாகும்.

அதேபோல உகந்தை முருகனாலய கொடியேற்றம் இடம் பெற்ற கடந்த ஆறாம் தேதி கானகத்தில் பிரவேசித்த அடியார்களின் எண்ணிக்கை 10,000 ஆகும். இதுவும் ஒரு வரலாற்று பதிவாகும்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த சி.ஜெயராசா தலைமையிலான 56 நாள் மிகநீண்ட பாதயாத்திரை அடியார்கள் மற்றும் மாமாங்கேஸ்வரர் யாத்திரை குழுவினர் உள்ளிட்ட 7 ஆயிரம் அடியார்கள் கலந்து கொண்டார்கள்.

இம்முறை வழமைக்குமாறாக சிங்கள அடியார்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தது.

மற்றும் படையினர் ஆராய்ச்சியாளர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள். இந்து பக்தர்கள் பெரும்பாலும் காவி உடை தரித்தே காணப்பட்டார்கள். ஆனால் ஏனைய அடியார்கள் சப்பாத்து கண்ணாடி நாகரீகஉடைகளோடுஒருசுற்றுலாபாணியில் பயணித்தார்கள்.

வெளிநாட்டவர்கள் சிலரும் கூடவே பயணித்தார்கள்.

இடையில் பரவலாக அன்னதானம் வழங்கப்பட்டது. தண்ணீரை சிவ தொண்டன் அமைப்பு சேவற்கொடியோன் அமைப்புஸ்பான்ட்அமைப்பு என பலதரப்பினரும் வழங்கினர். சந்நிதி மோகன் சுவாமி மற்றும் ஞானம் லைக்கா அமைப்பினர் முதல் நாள் பக்தர்களுக்கான உலருணவுடன் அழகான பையையும் வழங்கினார்கள்.

மேலும் குளிர்பானங்கள் தேநீர் பால் தேநீர் பிஸ்கட் தாம்பூலம் போன்றவற்றை ஜேர்மன் கலா சுவிஸ் விஜி மற்றும் அசோகன் போன்றோரின் அனுசரணையுடன் பிரபல சமூக சேவையாளர் ஜெயசிறில் வழங்கி வைத்தார். இப்படி பல பரோபகாரிகள் உதவி செய்தார்கள்.நாவலடியில் வழமைபோல வைத்திய கலாநிதி டாக்டர் அழகையா லதாகரனின் மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற்றது.

வியாழை நதிக் கரையோரம் இம்முறை கூடுதலானபக்தஅடியார்களால்களைகட்டியது. ஆனால் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடும் அந்த இடத்தில் போதுமான தண்ணீர் வசதி பாதுகாப்பு வசதி மேற்கொள்ளப்படவில்லை என்பது பக்தர்களின் குற்றச் சாட்டாகும்.

கதிர்காம காட்டுப் பாதை மொத்தம் 56 மைல்கள் ஆகும்.

உகந்தையிலிருந்து ஐந்து மைல்தூரத்தில் வாகூரவட்டை .பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு. 12 மைல் தூரத்தில் நாவலடி. பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை. 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு. 8 மைல் தூரத்தில் கட்டகாமம். அடுத்து 8 மைல் தூரத்தில் கதிர்காமம் மொத்தமாக காட்டுப்பாதை 56 மைல்களை உள்ளடக்கியது .

சுமார் 6 நாட்கள் இந்த காட்டுப் பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை. கடந்த 30 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்ட காட்டுப் பாதை 11 ஆம் தேதி மூடப்படுகிறது. கதிர்காம கொடியேற்றம் 06ஆம் திகதி நடைபெற்றது. இம மாதம் 22ஆம் திகதி தீர்த்தம் இடம் பெறும் .

கதிர்காமப் பாதயாத்திரை அகத்திய முனிவர் தொடக்கி அருணகிரியார் ஈறாகவும், யோகர் சுவாமி முதற்கொண்டு சித்தானைக்குட்டி வரை எண்ணிறைந்த சித்தர் பெருமக்கள் இன்றுவரை தம் பாதக் கமலங்களை பதித்து பவனி சென்ற பாதையில் வருடாவருடம் நாமும் பயணிக்கின்றோம்.

'ஷேத்திராடனம்' எனும் நூலில் கூறப்பட்டுள்ளன.

1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் கதிர்காமம் நோக்கி பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரை வரலாற்றில் இரண்டாவது தடவையாக கடந்த 01 ஆம் தேதி உகந்தை மலை முருகன் ஆலயத்தில் இருந்து சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் ஆரம்பமாகி கொடியேற்ற தினத்தில் (6)கதிர்காமத்தை சென்றடைந்தது.

அனைத்து வேல் அடியார்களும் காவி வஸ்திரங்கள் தரித்து அணிவகுத்து சென்றமை பக்திப் பரவசத்தை ஊட்டியது.

பாதயாத்திரை என்றால் இப்படித்தான் பக்தி முக்தியாக பயபக்தியுடன் ஆசாரசீலத்துடன் செல்ல வேண்டும் என்பதை இம்முறை இடம் பெற்ற பல யாத்திரை குழுவினரின் செயற்பாடுகள் பலருக்கும் உணர்த்தியது.

கதிர்காம கந்தனின் ஆடிவேல் உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பாதயாத்திரையை ஆரம்பித்த பக்தர்கள் கதிர்காம திருத்தலத்தை அடைந்து வருகின்றனர்.

பாதயாத்திரையானது குமண வன பறவைகள் சரணாலய காட்டுவழி பாதையூடாக ஆரம்பிக்கப்பட்டு 6 நாட்களில்

குறித்த யாத்திரையின் போது தாம் கந்தனை உணர்ந்ததாக யாத்திரிகர்கள் பக்தி பரவசத்துடன் தெரிவித்திருந்தனர்.

கதிர்காமத் திருத்தலத்தில் அமைந்துள்ள பள்ளிவாசலில் கடந்த 06 ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்றது.

சர்வமத தலைவர்கள், கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர உள்ளிட்ட அதிகளவிலான பக்தர்களும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

கதிர்காம கந்தனின் வருடாந்த ஆடிவேல் திருவிழாவில் இந்த ஆண்டுக்கான முதலாவது திருவீதி உலா(பெரஹரா) கடந்த 06 திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கதிர்காம கந்தனின் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 22 ஆம் திகதி மாணிக்க கங்கையில் நடைபெறவுள்ள நீர்வெட்டும் நிகழ்வுடன் நிறைவு பெறவுள்ளது.

(விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா



காலைக்கதிர் Kalāikkathir

## சட்டமூலம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்டது.

1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க இலங்கைத் தொலைத் தொடர்புச்சட்டத்தைத்திருத்துவதற் காக கடந்த மே 04 ஆம் திகதி தொழில்நுட்பஅமைச்சினால்இந்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், இது 28 வருடங்களின் பின்னர் திருத்தப்பட்டுள்ளது.

இதுவரைஉலகில்ஏற்றுக்கொள் ளப்பட்ட தரநிலைகளைப் பின்பற்றும் வகையில், போட்டி நிறைந்த சந்தையில் நுகர்வோருக்கு நியாயமான ஒழுங்குமுறைப்படுத்தலை மேற்கொள்வதற்கான வாய்ப்பை இந்தத் திருத்தச்சட்டமூலம் வழங்குகின்றது.

## முன்னாள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது. இவ்வொன்றியத்தின் தலைவராக முன்னாள் சபாநாயகர் கௌரவகருஜயசூரியஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

முன்னாள் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால அவரது பெயரை முன்மொழிந்ததுடன், முன்னாள் பாராளுமன்றஉறுப்பினர்சுமேதாஜி. ஜயசேனஅதனைவழிமொழிந்தார்.

அத்துடன், ஒன்றியத்தின் அழைப்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பிரேமரத்ன அனைத்து உறுப்பினர்களினதும் ஏகோபித்த முடிவில் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தக்கூட்டத்தில்பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் முகங்கொடுக்கும் சிக்கல்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், அந்த சிக்கல்களை நிவர்த்தி செய்துகொள்வதற்கு செயலாளர் நாயகத்தின்அலுவலகம்நடவடிக்கை எடுப்பதாக செயலாளர் நாயகம் குஷானிரோஹணதீரதெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் அறிவு மற்றும் அனுபவம் நாட்டின் எதிர்கால மேம்பாட்டுக்கு பங்களிப்பு செய்துகொள்வதன் முக்கியத்துவம் தொடர்பில் சபாநாயகர் சுட்டிக்காட்டி னார்.

அதற்கமைய,ஒன்றியத்துக்கான யாப்பை அமைத்தல் மற்றும் முன்னாள்பாராளுமன்றஉறுப்பினர் களின் சர்வதேச தொடர்புகள் மற்றும் அரசியல் அனுபவத்தை பயன்படுத்திநாட்டின்அபிவிருத்திக்கு பங்களிப்புசெய்யும்உபகுழுக்களை நியமிப்பதற்குஇதன்போதுஇணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய, நலன்புரி அலுவலர்கள் பற்றிய உப குழு, யாப்பு பற்றிய உப குழு, அரசியல் அலுவல்கள் பற்றிய உப குழு, பொருளாதாரம் மற்றும் சர்வதேச அலுவல்கள் பற்றிய உப குழு என உப குழுக்கள் நியமிக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் சபாநாயகர்கருஜயசூரிய, முன்னாள் பிரதி சபாநாயகர்களான திலங்க சுமதிபால மற்றும் ஆனந்த குமாரசிறி, முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர்களானசாந்தபிரேமரத்ன, அனுர பஸ்டியன், சந்திரதாச கலப்பத்தி, ரஞ்சன் ராமநாயக்க, சந்தன கத்ரியாராச்சி, ஜீவன் குமாரதுங்க, சுமேதா ஜி. ஜயசேன, திஸ்ஸ கறலியத்த, எம்.எஸ்.எஸ். அமீர்அலி,நோயல்பத்மசிறி,ஆனந்த குலரத்ன, சமந்தா கருணாரத்ன, ஹேமாரத்நாயக்க, உபாலிஅமரசிறி, தேமிய ஓஹருள்ளே, கேசரலால் குணசேகர, சமன்சிறி ஹேரத், தீபால் குணசேகர, பிரேமசிறி மானகே, பி. திஸ்ஸகுட்டியாராச்சி, உதித லொக்குபண்டார, கமலா ரணதுங்க, ஆர். நந்திமித்ர ஜி. த சொய்சா, ரவீந்திர சமரவீர, நந்தன குணதிலக, நந்திமித்ர ஏக்கநாயக்க, பி. தயாரத்ன உள்ளிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## சட்டத்தரணிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பியுள்ளார்.

அரசமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் சட்டமா அதிபரை நியமிக்க அரசமைப்பின் 41 சீ பிரகாரம் ஜனாதிபதிக்கு அரசமைப்பு ரீதியான அதிகாரம் உள்ளதாகவும், சட்டமாஅதிபர்திணைக்களத்தின்மிக மூத்த அதிகாரியை இந்தப் பதவிக்கு சேவை மூப்பு அடிப்படையில் நியமிக்க அரசமைப்பு ரீதியான அவசியம் கிடையாது எனவும் ஜனாதிபதியின் செயலாளர் அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மிகவும் சிரேஷ்ட அதிகாரிக்கு சட்டமா அதிபர் பதவி வழங்கும் முறை இலங்கை வரலாற்றில் பின்பற்றப்படவில்லை எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி சரத் என். சில்வா, ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் பீரிஸ் போன்றோரின் நியமனங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சேவை மூப்பிற்குப் புறம்பாகவே வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சட்டமா அதிபர் பதவிக்காக பலரது பெயர்களை சிபாரிசு செய்ததோடு, ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜெயசூரியவை சட்டமா அதிபராக நியமிப்பதற்குஅரசமைப்புப்பேரவை அங்கீகாரம் வழங்கியதையும் ஜனாதிபதி செயலாளர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் அமைச்சவையின்நம்பிக்கையைப் பெறுவதற்கு சாத்தியமான சகல நபர்கள் குறித்தும் விரிவாகப் பரிசீலிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, சட்டமா அதிபர் பதவிக்கு தகுதியான வேறு நபர்கள் இருக்கையில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஒருவரை மாத்திரம் ஆதரிக்கக் கூடாது எனவும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்தினம் ஓய்வு பெற்றதையடுத்து வெற்றிடமான சட்டமா அதிபர் பதவிக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கடிதமொன்றின் ஊடாக கோரியிருந்தது. இந்தச் செயற்பாட்டின் ஊடாக சேவை மூப்பை மதித்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் தொடர்ச்சி நிலை மற்றும் ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்படுவதாகவும் அது சட்டமா அதிபர் திணைக்களத்தில் நிறுவப்பட்ட படிநிலைக்கு இணங்குவதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியிருந்தது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் சதுர ஏ. கல்ஹேனவினால்கையொப்பமிடப் பட்ட இந்தக் கடிதத்தில், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கும் நீதியை உறுதிப்படுத்துவதற்கும் சட்டமா அதிபரின் முக்கிய வகிபாகத்தை வலியுறுத்தியதுடன், அவர்களின் கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிக்குமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

## நாட்டின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களின்உண்மைநிலையை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக வரவு செலவுத்திட்ட அலுவலக சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அத்துடன் நின்றுவிடாமல், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அரசியலமைப்பில் உள்ள அந்தப் பிரிவை பலப்படுத்தும் வகையில் பொருளாதார பரிமாற்ற சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதன்படி அரசியல் கட்சிகளின் பொய்களைக் கூறும் சகாப்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 2021 ஜூன் 23 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர், நாடுவீழ்ச்சியடைந்துவருகிறது, நாம் கவனமாக செயல்பட வேண்டும் என்றுகூறினார். விரைவில்சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்ல வேண்டும் என்றும் நாடு செல்லும் பாதையை மாற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார். ஆனால் அதைஅப்போதையஆட்சியாளர்கள் நிறைவேற்றாததால் இறுதியில் அந்த ஆட்சி செயலற்றுப்போனது.

அதன்பின்னர், 2022மேமாதம் 12 ஆம் திகதி, நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு ஆசனத்தை மட்டுமே வகித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, பிரதமராகப்பதவியேற்றார். பின்னர், அரசியலமைப்பின் படி, ஜூலை 20 ஆம் திகதி, நாடாளுமன்றத்தில் அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவுடன், அவர்134வாக்குகளைப் பெற்று, எட்டாவது நிறைவேற்று ஜனாதிபதியாக நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

அத்துடன், இரண்டு வருடங்களுக்கு முன்னர் வங்குரோத்து நிலையில் இருந்த நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி, சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வந்தார். ஆனாலும்இந்தப்பிரச்சினை இன்னும் முடிந்துவிடவில்லை. தற்போது வெளிநாட்டுக் கடனை அடைக்க 2027 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 500 கோடி டொலர்கள் வெளிநாட்டுக் கையிருப்பு உள்ளது. இலங்கைப் மக்களுக்கு வாழ்வளித்து, அவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்களை ஆரம்பித்து நாட்டைக் கட்டியெழுப்பும் இலக்குகளை பொருளாதார பரிமாற்றச் சட்டம் வழங்கியுள்ளது. அதன்படி, 2027 ஆம் ஆண்டுக்குள் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதம் என்ற இலக்கில் பேணப்பட வேண்டும் என்று சட்டம் நிர்ணயித்துள்ளது.

இத்துடன் நின்றுவிடாமல் ஜனாதிபதி, 2030ஆம் ஆண்டிலும், 2042ஆம் ஆண்டிலும் யார் நாட்டை ஆட்சி செய்தாலும் அந்த அரசியல் கட்சிகளின் பொறுப்பு, சட்டமாக்கப்பட்டுள்ளது. மேலும் நாம் கவனமாக செயற்பட வேண்டியுள்ளது. யாரேனும் இம்முறை நாட்டை தவறின் பக்கம் தள்ளினால் நாம் அவர்கள் யார் என்பதை அடையாளம் காண வேண்டும். உதாரணமாக, பொய் கூறுபவர்களின் பட்டியல் ஒன்றை கிராமத்தில்காட்சிப்படுத்தவேண்டும். பொதுமக்களை ஏமாற்றும் குழுக்களையும், பொய்யான வாக்குறுதிகளை வழங்கும் குழுக்களையும் பொதுமக்கள் அடையாளம் காண வேண்டும்.

இந்த முறை மீண்டும் ஒரு தவறை செய்தால், அந்தத் தவறை மீண்டும் மாற்ற முடியாத கடுமையான தவறாகிவிடும். எனவே, நாம் இப்போது மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். அவ்வாறென்றால், நாட்டிற்கு ஆட்சியாளர்களை நியமிக்கும்போது இலங்கை மக்கள் சிந்திக்க வேண்டிய ஒரு விடயம் உள்ளது. அடுத்தஜனாதிபதிபதவிக்கு ரணில் விக்ரமசிங்கவைத் தவிர வேறு யாராவது இருந்தால், அவர் எந்த வகையில் பொருத்தமானவர் என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். எனவே, இந்நேரத்தில் பொதுமக்கள்பொறுப்புடன்செயல்பட வேண்டியுள்ளது.

தற்போது சில தரப்பினர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். தேர்தலில்வெற்றிபெறமுடியாததால், அவர்களின்தனிப்பிட்ட வெற்றிக்காக நாட்டை சீர்குலைக்க தயாராகி வருகின்றனர். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் கோரும் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டுமாயின் 18 சதவீத வெட் வரி 21 சதவீத அதிகரிக்கப்பட வேண்டும் என நிதியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இதனால், உழைக்கும் மக்களின் தேநீர் கோப்பையினதும், அரிசி பொட்டலத்தி னதும் விலைகள் அதிகரிக்கும். அவ்வாறு நடந்தால், வங்குரோத்தான நாடு மீண்டும் அதனை விட ஆபத்தான நிலைக்குச் செல்வதைத் தடுக்க முடியாது. இலங்கை மக்கள் அனைவரும் இதற்கு ஆதரவளிக்க மாட்டார்கள் என்றும் நம்புகிறோம் என்றார்.

## போக்குவரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூகமளிக்காத ஊழியர்களுக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலர் ரஞ்சித் ரூபசிங்க தெரிவித்துள்ளார்

அண்மையில்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவினால்போக்குவரத்து சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொடருந்து நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்களால் திடீரென அழைப்புவிடுக்கப்பட்டுள்ளவேலை நிறுத்தம் சட்டவிரோதமானது என்றும் அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

இந்த திடீர் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நேற்று பதுளை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்புக்கு இயக்கப்படவிருந்த இரவு அஞ்சல் தொடருந்துகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட மக்களின் பயணத்தை இலகுபடுத்துவதற்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் வழமை போன்ற சேவையில் ஈடுபடுத்தப்படும். எனவே பணிப்புறக்கணிப்பு காரணமாக அலுவலக தொடருந்துகளை இயக்குவதில் இடையூறு ஏற்பட்டால் அந்த பஸ்களை அதிகளவில் ஈடுபடுத்தி தொடருந்து பருவ கால சீட்டினைப்பயன்படுத்தி இலவச போக்குவரத்தை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்

## அஸ்வெசுமவுக்கான

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பிக்க முடியாதவர்கள் அல்லது தவறியவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க, நலன்புரி நன்மைகள் சபை சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

மாற்றுத் திறனாளிகள், பாதிக்கப்படக்கூடியவர்கள், வறியவர்கள், மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ள ஏழைகள் ஆகிய 4 சமூகப்பிரிவுகளின்கீழ்'அஸ்வெசும' நலன்புரி வழங்கப்படுவதோடு ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு வழமை போன்று கொடுப்பனவுகள் வழங்கப்படுகிறன.

இதனிடையே, களத் தகவல் சேகரிப்பை திறம்படச் செய்ய ஊஜூலிமிலி, னிழிஞ்ரீ, னிழி, ாலிஷ்உள ஊஜூழவழஇ ஆயிஇ ஏழஷ்உ நசுநஉ முசணஷ்பெஉள்ளிட்ட வசதிகளுடன் கூடிய புதிய கைபேசி மென்பொருள் (னிலிஞுஷ்யிளயி னிலிஞுஷ்யிள ழிஞ்ரீஞ்ரீ) ஒன்றை நலன்புரி நன்மைகள் சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, கைபேசி மென்பொரு ளின் ஊடாக தகவல் சேகரிப்பை முன்னோடி திட்டமாக கொழும்பு பிர தேச செயலக பிரிவில் நடைமுறைப் படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.




# வான் மோதியதில் பாதசாரி இறப்பு

பமுனுகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நீர்கொழும்பு – உஸ்வெட்டகெய்யாவ வீதியில் உஸ்வெட்டகெய்யாவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் பாதசாரி ஒருவர் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

போப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

நீர்கொழும்பிலிருந்து உஸ்வெட்டகெய்யாவ நோக்கிப் பயணித்த வான் ஒன்று வீதியில் பயணித்த பெண் பாதசாரி ஒருவர்மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போதுபடுகாயமடைந்த பெண் பாதசாரி ராகம வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் ராகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது, வான் சாரதி தப்பிச்சென்றுபின்னர்பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டவிசாரணையில் வானுடன்கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (05)

# வாடகைக்கு அமர்த்திய ஹயஸில் மாடு கடத்தல்

வாகனம் விபத்துக்குள்ளானதில் மாட்டிய நபர்



வவுனியாவில் வாடகைக்கு அமர்த்திய ஹயஸ் ரக வாகனத்தில் மாட்டை கடத்தியவர் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் நேற்று (செவ்வாய்க்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, பாவற்குளம் பகுதியைச் சேர்ந்த சிலர் ஆச்சிபுரம் பகுதியில் ஹயஸ்ரக வாகனம் ஒன்றை வாடகைக்கு பெற்றதுடன், குறித்த வாகனத்தில் கோவில்குளம் பகுதியில் இருந்து இரு மாடுகளைக் கடத்தியுள்ளனர்.

மாடுகளுடன் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதால் குறித்த வாகனத்தை வாகன திருத்தும் இடம் ஒன்றில் நிறுத்தி விட்டு இரு மாடுகளையும் இறைச்சிக்காக விற்றுள்ளனர்.

மாடுகடத்தப்பட்டமைதொடர்பில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில்

உப பொலிஸ் பரிசோதகர் அகமட் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட்டுகளான திசாநாயக்கா, திலீபன்,பொலிஸ்கொன்தாபிள்களான உபாலி, தயாளன், ரணில் உள்ளடங்கியபொலிஸ்குழுவினர்விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, மாடுகளை கடத்திய பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன், விபத்துக்குள்ளான வாகனமும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளின் பின் சந்தேகநபரைநீதிமன்றில்முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவனவாக சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரம் அமையும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள், மக்களின்எதிர்பார்ப்புகளைநிறைவேற்றும்வகையில் அமையும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் ரமேஸ் பத்திரன மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் ஆகியோருடனான கலந்துரையாடலில் இதனை வெளிப்படுத்தினார்.

மேலும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சுமுகமான சூழலை ஏற்படுத்துவதற்கு, குறித்த வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ள வைத்தியர் அர்ச்சுனா இராமநாதனுக்கு விடுமுறை வழங்குவதுடன், பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களை மீளவும் கடமைக்கு திரும்பச் செய்து வைத்தியசாலையின் செயற்பாடுகளை முதற் கட்டமாக ஆரம்பிப்பது.

பின்னர், விசாரணைக் குழு ஒன்றை நியமித்து, வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள், அவை நீண்டகாலமாக நிவர்த்தி செய்யப்படாமைக்கான காரணம் மற்றும் வைத்தியர் அர்ச்சுனா தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் போன்றவை தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொண்டு, அதனடிப்படையில் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளுவது தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இதன் போது தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# நோயாளிகளை விட்டு ஓடிய வைத்தியர்கள் தமது பிள்ளைக்கு என்றால் செல்வார்களா?

## போராட்டத்தில் ஈடுபட்ட பெண் கேள்வி

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சை விடுதியில் சேர்க்கப்பட்ட நோயாளர்களைக் கருத்தில் கொள்ளாது தமது சுகபோகங்களை அனுபவிப்பதற்காக வைத்தியசாலையை விட்டு ஓடிச்சென்ற வைத்தியர்களை எவ்வாறு மக்கள் நம்புவது என போராட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

திங்கட்கிழமை சாவச்சேரி ஆதார வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர் அர்ச்சுனாவை மாற்றக்கூடாது மற்றும் வைத்தியசாலையின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்குமாறு கோரி கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இந்த போராட்டத்தில் கலந்து கொண்ட பெண் ஒருவர், தமது சிறிய வயது காலத்தில் இருந்து இந்த வைத்தியசாலையை பயன்படுத்தி வருகிறோம்.

இங்கு வைத்தியர்கள் சுமார் 20 இற்கும் மேற்பட்டவர்கள் இருப்பது தற்போதைய வைத்தியர் அர்சுனா வெளிப்படுத்தியதன் மூலம் நாம் அறிந்து கொண்டோம்.

நாங்கள் சிகிச்சைக்கு வரும்போது வைத்தியர் இல்லை என பலமுறை திரும்பிச்சென்றிருக்கின்றோம். ஆனால் இங்கு இருபதுக்கும் மேற்பட்ட வைத்தியர்கள் இருக்கும் விடயம் தற்போது தான் எமது மக்களுக்குத் தெரியவந்தது.

இங்கு கடமையாற்றும் வைத்தியர்கள் பலர் வைத்தியசாலைக்கு வராது வீடுகளிலும் தனியார் வைத்திய சாலைகளிலும் கடமையாற்றுகின்றமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் சிலர் கடவுளுக்கு நிகராக வைத்தியத் துறையைக் கருதி சேவை செய்து வரும் நிலையில் சிலர் அவர்களையும் குழப்பி தமது நிகழ்ச்சி நிரலின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்று நாள்களாக வைத்தியர்கள் குறித்த வைத்திய சாலையை விட்டு வெளியேறச் சென்று இருக்கிறார்கள் அவர்களுடன் வைத்தியசாலையை விட்டுச் செல்ல விருப்பமில்லாத வைத்தியர்களும் நிர்பந்தத்தின் அடிப்படையில் சென்றிருப்பதை நான் அறிகிறோம். வைத்தியர் ஒருவர் வைத்திய சாலையில் நடக்கும் முறைகேடுகள் தொடர்பில் வெளிப்படுத்தியதற்காக ஏழை நோயாளிகளைக் கைவிட்டு விட்டு சென்ற வைத்தியர்கள் தமது பிள்ளை அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டால் போராட்டம் என கூறி வெளியேறிச் செல்வீர்களா எனக் குறித்த பெண் கேள்வி எழுப்பினார். (05)

# பாக்கு நீரிணையைக் கடந்து சாதனை படைத்த ஹரிகரன் தன்வந்தைப் பாராட்டிய ஜனாதிபதி



(ஹஸ்பர் ஏ.எச்)

பாக்கு நீரிணையை கடந்து சாதனை படைத்த 13 வயதான திருகோணமலையை சேர்ந்த ஹரிகரன் தன்வந்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் இச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மார்ச் மாதம் முதலாம் திகதி பாக்கு நீரினையை கடந்து சாதனை படைத்த மாணவனை ஜனாதிபதி இவ்வாறு பாராட்டியதுடன் கடலில் நீந்திய அனுபவங்களையும் கேட்டறிந்து கொண்டார் என அவரது பெற்றார் ஆர்.ஹரிகரன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் குறித்த சாதனை வீரரின் தாய் தந்தையர் குடும்பஸ்தாரும் கலந்து கொண்டனர். (05)



# தாந்தாமலை முருகன் ஆலய வருடாந்தக் கொடியேற்றம்





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலய வருடாந்த உற்சவ திருக்கொடியேற்றம் முதலாம் திகதி காலை நூற்றுக்கணக்கான பக்தர்கள் புடைசூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. தீர்த்தம் 22 ஆம் திகதி நடைபெறும். (05)

# வாழ்வாதாரத்தை வளர்க்க ஆடுகள் வழங்கி வைப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த ஆடுகள் வழங்கி வைக்கப் பட்டன.

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கீழ் சங்கமன் கிராமம், தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு ஆகிய கிராமங்களில் சௌபாக்கியா உற்பத்திக் கிராம செயற்றிட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள 30 பயனாளிகளில் முதற்கட்டமாக 15 பயனாளர்களுக்கு அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு ஆடுகள் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன், உதவிச்செயலாளர் திருமதி எஸ்.நிருபா, கணக்காளர் ஏ.எல்.எம்.றிபாஸ், உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி அனோஜா உஷாந்த் மற்றும் பயனாளர்களின் பிரிவுகளுக்குரிய கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)





# சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள் அஷ்ரஃப் சிஹாப்தீனின் கவிதை நூல்





பன்னூலாசிரியரும் ஒலி, ஒளிபரப்பாளருமான அஷ்ரப் சிஹாப்தீனின் 'சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்' கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு கொழும்பு 09 தெமடகொட வீதி, வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் வகவம் தலைவர் கவிமணி என். நஜ்முல் ஹுஸைன் தலைமையில் வெற்றிகரமாக நடைபெற்றது.



நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எ.எச்.எம். பௌஸியும் விசேட அதிதியாக மீன்பிடித்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி அனுஷா கோகுல பெர்னாண்டோவும் கலந்து சிறப்பித்தனர். முதற் பிரதியை ஜனாப்.மன்ஸூர் அப்துல்லாஹ் பெற்றுக்கொண்டார்.

கௌரவ அதிதிகளாக எம்.எச்.எம். அன்ஸார் (மாஷா பில்டர்ஸ்), எம்.என்.எம், பிஷ்ருல் அமீன் (சட்டத்தரணி), மொஹமட் மில்ஹான் (ஜப்பான் லங்கா என்டர்பிரைஸஸ்), கவிஞர் நாச்சியாதீவு பர்வீன், ஆகியோர் பங்கு பற்றினர்.

வரவேற்புரையை கவிஞர் சிமாரா அலியும் வாழ்த்துரையை மாத்தளை எம்.எம். பீர்முகம்மது அவர்களும் வழங்கினர்.

நூல் பற்றிய உரைகளை எழுத்தாளர் பூர்ணிமா கருணாகரன், கவிஞர் எஸ்.ஏ.சி.பி. மரிக்கார் ஆகியோர் நிகழ்த்தினர். நிகழ்ச்சதி தொகுப்பு திருமதி ஆஷிகா பர்ஸான் வெளியீட்டு நிகழ்வுக்கான ஏற்பாடுகளை இலங்கை நெய்னார் சமூகநலக் காப்பகத்தின் தலைவர் இம்ரான் நெய்னார் சிறப்பாக செய்திருந்தார். (05)

# கஷ்ட பிரதேச பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(பி.கேதீஸ்)

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக 2005ஃ2006 ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவர்களின் பங்களிப்பில் நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கஸ்ட பிரதேச பாடசாலையான தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலை ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக 2005ஃ2006 ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவர்களான கிருபானந்த், தனுஷாந்த், கேதீஸ், நிதர்ஷன், வினோத், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் விஜயகுமார் மற்றும் பாடசாலை ஆசியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.(05)

# மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமை சந்தித்தார் கிழக்கு ஆளுநர் செந்தில்!

## இலங்கை வருமாறு அழைப்பும் விடுத்தார்

(ஹஸ்பர் ஏ.எச்)

மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் நேற்று (செவ்வாய்க்கிழமை) கோலாலம்பூரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.



மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ சரவணன் முருகனின் விசேட அழைப்பின் பேரில் உத்தியோகப்பூர்வ பயணமாக ஆளுநர் செந்தில் தொண்டமான் ஞாயிற்றுக்கிழமை மலேசியாவுக்குச் சென்றார்.

பிரதமர் அன்வர் இப்ராஹிம் உடனான சந்திப்பில் மலேசியா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து ஆழமான கலந்துரையாடலை ஆளுநர் செந்தில் தொண்டமான் நடத்தினார்.

மலேசியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் வலுவான இருதரப்பு உறவுகளை உருவாக்குவதற்கான சாதகமான காரணிகள் குறித்தும் ஆளுநர் செந்தில் தொண்டமான் மலேசிய பிரதமருடன் கலந்துரையாடினார்.

அத்துடன், இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான அழைப்பையும் பிரதமர் இப்ராஹிம்முக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் விடுத்ததுடன், இலங்கையில் வாழும் பெருந்தோட்ட சமூகத்தின் 200 வருட நினைவு முத்திரையையும் மலேசியப் பிரதமருக்கு வழங்கியிருந்தார்.

இதேவேளை, மலேசிய நிதியமைச்சர் அமீர் ஹம்சா, பிரதமர் துறை அமைச்சர் (இஸ்லாமிய சமய விவகாரங்கள்) நைம் ஆகியோரையும் மரியாதை நிமித்தமாக ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்தித்தார்.(05)

# நானுஓயா சமர்செட் தோட்ட தொழிலாளர் ஆர்ப்பாட்டம்





(பி.கேதீஸ்)

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு நாள்சம்பளமாக 1700 ரூபா வழங்குமாறு வலியுறுத்தி நானுஓயா சமர்செட் தோட்ட தொழிலாளர்களும் அத்தோட்ட கொழுந்து மடுவத்திற்கு முன்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (05)

# கிண்ணியாவில் பல பாடசாலைகளில் கற்றல்; நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்

அதிபர்கள், ஆசிரியர்கள் சுகவீன விடுமுறை போராட்டம் காரணமாக கிண்ணியா வலய கல்வி அலுவலகத்துக்குட்பட்ட அனைத்து பாடசாலைகளின் கல்வி நடவடிக்கை முடக்கப் பட்டன.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அதிபர்கள், ஆசிரியர்கள் சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடுவதன் காரணமாக

கிண்ணியா வலய கல்வி அலுவலகத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் செயலிழந்து உள்ளன.

கிண்ணியவளையகல்விஅலுவலகத்துக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை, குறிஞ்சாக்கேணி, கிண்ணியா ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளிலேயே இவ்வாறு கல்வி நடவடிக்கைகள் முடங்கியுள்ளன.

சில பாடசாலைகளில் மாணவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் வருகை தந்த போதிலும் ஆசிரியர்கள், அதிபர் வருகை தராததன் காரணமாக அவர்கள் வீடு திரும்புவதை காணக் கூடியதாக இருந்தது.

கிண்ணியா மத்திய கல்லூரி, கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரி, கிண்ணியா அல் அக்ஸா கல்லூரி, ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலயம் உட்பட ஏனைய அனைத்து பாடசாலைகளும் இயங்காத நிலையில் காணப்பட்டன. (05)

# மின்சார சபை ஊழியர்கள் ஒன்றிணைந்து போராட்டம்

(பாறுக் ஷிஹான்)

இலங்கை மின்சார சபையின் கல்முனை தலைமை அலுவலகத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்றை நேற்று (செவ்வாய்க்கிழமை) முன்னெடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தின் போது 2024 ஆண்டிற்கான சம்பள உயர்வை உடனடியாக வழங்கு, சம்பள முரண்பாட்டு தீர்வை உடனடியாக வழங்கு , வேலை நீக்கம் செய்த 62 தொழிலாளர்களை உடனடியாக சேவையில் இணைத்துக் கொள் என பல்வேறு வாசகங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து அமைதி வழிப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மேலும் மின்சார தொழிலாளர் கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லையாயின் ஆட்சியாளர்களை விரட்டியடிப்போம் என ஊடகங்களிடம் குறிப்பிட்டனர்.

இதன் போது சுமார் 50 இற்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் இப்போராட்டத்தில் பங்கேற்றிருந்ததுடன் இலங்கை மின்சாரத் தொழிற்சங்கம் இப்போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.07.2024இல் வெளியிடப்பெற்றது